அனுப்புநர்
திரு ஆ. செ. மோகன்பாபு எம்., எஸ்.சி எம் எட், எம் பில்.,
முதல்வர் (பொ).,
மாவட்ட ஆசிரியர்கல்விமற்றும்பயிற்சிநிறுவனம்,
திரூர், திருவள்ளூர் மாவட்டம்.

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
திருவள்ளூர், இராணிப்பேட்டை,
திருவண்ணாமலை, காஞ்சிபுரம்,
செங்கல்பட்டு, கடலூர், கள்ளக்குறிச்சி,
வேலூர், திருப்பத்தூர்.

நக. எண் : 07/அ3/2022 நாள்: 12.01.2023

மதிப்பிற்குரிய அம்மையீர்,

பொருள் : ஆசிரியர் கல்வி – புதிதாக நியமனம் செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சி – அனைத்து மாவட்டத்தில் 19.01.2023 முதல் 20.01.2023 வரை வரலாறு, தமிழ், பொருளியல் (Economics) பாடவாரியாக 2 நாட்கள் பயிற்சி நடைபெறுதல் – ஆசிரியர்கள் பணிவிடுப்பு – சார்பு

பார்வை : சென்னை–06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் செயல்முறைகள் ந.க.எண்.5953/F1/2022, நாள் 02.01.2023.

-------

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க கீழ்க்காணும் விவரப்படி உள்ள பாடவாரியாக புதிதாக நியமனம் செய்யப்பட்ட முதுகலை ஆசிரியர்களுக்கு பாடத்திட்டம், பாடபுத்தக உருவாக்கம், கற்பித்தல் அணுகுமுறைகள், வகுப்பறை மேலாண்மை புதிய கற்பித்தல் உத்திகள், வினாத்தாள் தயாரித்தல் மற்றும் கல்வித்துறை அமைப்பு ஆகியவை சார்ந்து. **புத்தாக்க உண்டு உறைவிடப் பயிற்சி 19.01.2023 முதல் 20.01.2023 வரை (2 நாள்) நடைபெறவுள்ளது.** இப்பயிற்சியானது மாநில அளவில் பயிற்சி பெற்ற கருத்தாளர்களால் வழங்கப்படவுள்ளது.

மேற்கண்ட பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதிகளில் **திருவள்ளூர் மாவட்டம் S.K.R. பொறியியல் கல்லூரி, நசரத்பேட்டை, அகரமேல், பூந்தமல்லி** என்ற மையத்தில் பயிற்சி பெறவுள்ளது. உரிய தலைமை ஆசிரியர்களுக்கு தக்க அறிவுரை வழங்கி முதுகலை ஆசிரியர்களை பணிவிடுப்பு செய்திடுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு:

பயிற்சிக்கு வரும் போது 11 மற்றும் 12 ஆம்வகுப்பு பாடபுத்தகங்களை தவறாமல் எடுத்துவர வேண்டும்.

இணைப்பு: பயிற்சி நடைபெறும் விவரம் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை

முதல்வர் (பொ)
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிநிறுவனம்,
திருவூர், திருவள்ளுர் மாவட்டம்.

நகல்:

1. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநருக்கு தகவல் அறிய பணிந்தனுப்பப்படுகிறது.
2. உரிய மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் பங்கேற்பாளர்கள் விவரம் அனுப்பி வைக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**<u>பயிற்சி நடைபெறும் விவரம்</u>**

| வ. எண் | பாடம் | பயிற்சி நடைபெறும் நாள் | பயிற்சியில் கலந்துகொள்ள உள்ள முதுகலை ஆசிரியர்கள் (மாவட்டம் வாரியாக ) எண்ணிக்கை | பயிற்சி மையம் | பயிற்சி ஒருங்கிணைப்பாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | வரலாறு | 19.01.2023 & 20.01.2023 | திருவள்ளுர் – 11<br>இராணிப்பேட்டை – 03<br>திருவண்ணாமலை –02<br>காஞ்சிபுரம் – 08<br>செங்கல்பட்டு – 11<br>கடலூர் – 4<br>கள்ளக்குறிச்சி – 2<br>----<br>41<br>---- | S.K.R. பொறியியல் கல்லூரி, நசரத்பேட்டை, அகரமேல், பூந்தமல்லி | திருமதி. G. தவமணி மகேஸ்வரி, முதுநிலை விரிவுரையாளர், DIET,Tirur, Cell.No. 9444779027<br><br>திரு. ஆன்றோ மிலட் சேவியர், விரிவுரையாளர், DIET, Tirur 9884308491 |
| 2 | பொருளியியல் | 19.01.2023 & 20.01.2023 | திருவள்ளுர் –29<br>வேலூர் – 09<br>திருபத்தூர் –04<br>ராணிப்பேட்டை – 09<br>---<br>51<br>--- | | |
| 3 | தமிழ் | 19.01.2023 & 20.01.2023 | திருவள்ளுர் – 44 | | |

ந.க.எண்:- 785/அ4/2022 நாள்.

முதல்வர் (பொ)
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிநிறுவனம்,
திருவூர், திருவள்ளுர் மாவட்டம்.

அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் புதியதாக நியமனம் பெற்று பணியில் சேர்ந்துள்ள பொருளியியல் முதுகலை ஆசிரியர்கள் இரண்டு நாட்கள் நடைபெறும் உண்டு உறைவிட பயிற்சியில் கலந்துக்கொள்ள ஏதுவாக பணியில் இருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

Chief Educational Officer
Vellore-632 009